மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 76/2015

பெயர் : வெங்கடேஸ்வரன்
சாட்சி – வா.சா–2 நாள்: 14.03.2025

---

**குறுக்கு விசாரணை (1, 3, 6 முதல் 8 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பு)**

1. எனது பூர்வீகம் மதுரை ஆகும். நான் கோயம்புத்தூர் வந்து முப்பது வருடங்கள் ஆகிறது. நான் டெக்ஸ்டைல் தொழில் செய்து வருகிறேன். நான் எனது சிறிய வயதில் இருந்து டெக்ஸ்டைல் தொழில் தான் செய்து வருகிறேன். கோடாங்கி பாளையத்தில் நான் 2021 வாங்கிய பூமியை எனக்கு யார் அறிமுகப்படுத்தியது என்றால் ராமசாமி தான் அறிமுகப்படுத்தினார். ராமசாமி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. ராமசாமியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவரை டெக்ஸ்டைல் தொழில் மூலம் தெரியும். ராமசாமி சோமனூரில் வைத்து டெக்ஸ்டைல் தொழில் செய்து வந்தார். அவருடைய தொழிற்சாலை மற்றும் அலுவலகம் சோமனூரில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்லும் க.ச.152 காலை சொத்திற்கும் சோமனூருக்கும் இடையே எட்டு அல்லது ஒன்பது கிலோமீட்டர் தொலைவு இருக்கும்.

3. ராமசாமி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் வாங்கிய சொத்தை விற்றவர்கள் தகராறு செய்வதாக போட்டுள்ளார். பிரச்சனை இருப்பதாக என்னிடம் எப்போது சொன்னார் என்றால் அவர் நான்கு வருடங்களுக்கு முன்பு சொன்னார். நான் என்ன பிரச்சனை என்று உன்னிப்பாக கேட்டேனா என்றால் இல்லை. ராமசாமி சொத்தினை யாரிடமிருந்து எவ்வளவு விஸ்தீரனத்திற்கு வாங்கினார் என்ற விவரங்களை நான் ஆவணம் எதுவும் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

4. தாவா சொத்தினை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் சென்ற வாரம் பார்த்தேன். நான் விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா பூமியில் ராமசாமி கடைசியாக விவசாயம் செய்ததை எப்போது பார்த்தேன் என்றால் இரண்டு வருடங்களுக்கு முன்பு பார்த்தேன். அவர் சோளம் போட்டு இருந்தார். நான் சோளம்

போட்டிருந்த போது கதிர் என்ன நிலையில் இருந்தது என்றால் விளைந்த நிலையில் இருந்தது. ஒரு பூமியை உழவு செய்வது என்றால் எனக்கு என்ன என்று தெரியாது.

5. உழவே செய்யாத பூமியில் பயிர் விளையுமா விளையாதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராமசாமி கிரயம் பெற்றதாக சொல்லும் நாளிலிருந்து அந்த பூமி உழவே செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனது நிரூபன வாக்குமூலத்தில் ராமசாமி தாவா சொத்தில் மானாவாரி விவசாயம் செய்வதாக சொல்லி உள்ளது நான் என்னவென்றே தெரியாமல் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்து கடந்த 15 ஆண்டுகளாக விவசாயத்திற்கு ஏற்றதாக இல்லாமல் நிலையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி மற்றும் 1, 3, 6 முதல் 8 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**10 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.03.14 19:45:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.